2024 பிப்ரவரி 19] [திரு. தங்கம் தென்னரசு]

216. இந்த வரவு–செலவுத் திட்டத்தினைச் செதுக்கிடத் தேவையான பல ஆலோசனைகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் எனது மனம் நிறைந்த நன்றிகளை உரித்தாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

217. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2024–25 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்திற்கு இந்த அவையின் ஒப்புதலைப் பெற்றுத் தருமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

நான் பிறந்த விருதுநகர் மாவட்டத்தில் தோன்றி, சங்க தமிழ்ப் பாடலைப் பாடிய ஆண்டாள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல,

“...எற்றெக்கும் ஏழேழ் பிறவிக்கும்
உன்றன்னோடுற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்
செய்வோம்...”

என்ற வரிகளை நினைவுகூர்ந்து, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் உறங்கும் இடம் நோக்கி தொழுது, என் உரையை நான் நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாழ்க தமிழ்! (மேசையைத் தட்டும் ஒலி) வெல்க தமிழ்நாடு! நன்றி! (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

2. அரசினர் தீர்மானம்

விதி 32–ஐத் தளர்த்துதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நாளை (20–2–2024) செவ்வாய்க்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

“சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, நாளை (20–2–2024) தளர்த்தி அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்”

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை (20–2–2024), செவ்வாய்க்கிழமை அன்று வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (20–2–2024), செவ்வாய்க்கிழமை காலை 10–00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 12–08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

******

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS